DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.23/20

Deposition of Witness: PW 2

| | |
|---|---|
| Name ராம்சங்கர் | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.06.2022

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் கொடுவிலார்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன்.அசா1 எனக்கு சித்தப்பா. ஆஜர் எதிரிகளில் இடதுபக்கத்திலிருந்து 2 வதாக உள்ள நபர் (வெங்கடேஷ்)என்பவரை மட்டும் தான் எனக்கு தெரியாது மற்றவர்களை எனக்கு தெரியும். எங்களுக்கு சொந்தமான இடம் சர்வேஎண். 283/141 ஆகும். எங்கள் வகையறாவிற்கு மொத்தம் 8 சென்ட் பாத்தியம். 23.1.10 ல் இரவு 12 மணிக்கு வீர்ம்மாள், சுப்பன் மாரிச்சாமி, அவரின் மகன்கள், வெங்கடேசன் மற்றும் 7,8 பேர்கள் அங்கு வந்து பிரச்சனை செய்தார்கள். ஊருக்கார்கள் சேர்ந்து இரவில் பிரச்சை வேண்டாம் பகலில் வாங்கள் என்று சொன்னதால் போய்விட்டார்கள். அதன்பின்பு தேனி எஸ்பி அலுவலகத்தில் என் சித்தப்பா அசா1 27.1.10 ல் புகார் கொடுத்தார். நானும் உடன் சென்றேன். 2.2.10 ல் பிசிபட்டி காவல்நிலையத்திலிருந்து என்னை அழைத்து விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

சம்பவம் நடந்த சமயத்தில் நான் சம்பவ இடத்திலிருந்தேன். சம்பவ நடந்த தேதி 23.1.10 ல் நடந்தது. அசா1 எனக்கு சொந்த சித்தப்பா. என் அப்பாவுடன் பிறந்த சகோதரர். அசா1 புகார் கொடுக்கும் போது நானும் அவருடன் சென்றேன். தாவா சொத்து மாரிமுத்துசாமி செட்டியார் பெயரில் உள்ளது. மேற்படி தாவா சொத்தை நாங்கள் அனுபவித்து வந்தற்கான பட்டாவை நான் போலிசாரிடம் கொடுத்துள்ளேன். பிரச்சனைக்குரிய இடம் 8 செண்ட் நிலம். அசா1 புகார் மனுவில் 20 செண்ட் என புகாரில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். எதிரிகள் எங்கள் இடத்திற்குள் போகவில்லை என்றாலும் அவர்களுக்கு சொந்தமான இடத்திற்குள் சென்றதை எங்களுக்கு சொந்தமான இடம் என்று பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால்ச ரியல்ல. சம்பவ சமயத்தில் யாருக்கும் காயம் ஏற்பட்டதா என்றால் ஏற்படவில்லை . மிரட்டல்கள் தான் இருந்தது. எதிரிகள் இரவு 12 மணிக்கு இருப்பதாக எங்களுக்கு யார் தகவல் சொன்னார் என்றால் மாரிமுத்துசாமி வீடு அந்த இடத்தில் உள்ளது. அவர் தான் தகவல் சொன்னார். மாரிமுத்துசாமி எந்த வழியில் எங்களுக்கு தகவல் சொன்னார் என்றால் போன் மூலம் சொன்னார். நடந்த சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் அதன் அளவுகள் எத்தனை செண்ட் என்று தெரியாது என்றாலும் நான் அசா1 எனக்கு சித்தப்பா என்பதால் நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.